[1979 மார்ச் 31

(ஆ) மின்சாரத் துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 184-வது விதியின் கீழ் திரு.மு. அம்பிகாபதி அவர்கள் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. திரு. மு. அம்பிகாபதி........

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 1978ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் அன்று இந்த அவையில் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. துரை கோவிந்தராஜன் அவர்கள் தஞ்சை மாவட்டம் சித்தமல்லி கிராமத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் ஒரு சம்பவம் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த போது அந்தச் சம்பவத்தின் தொடர்பாக நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். சம்பந்தப்பட்ட பிரச்சினையில் /திரு. ஷேக் தாவூத் சந்தேகத்தின் பேரில் குறிப்பிட்ட நபர்களை விசாரணை செய்யப்பட்டு, ருசுவாகவில்லை. இந்நிகழ்ச்சிகள் இரவில் நடைபெற்றமையாலும் நேரடி சாட்சிகள் இல்லாமையாலும் இதுவரை யாரும் கைது செய்யப் படவில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களுக்கு இப்படிப்பட்ட தகவலைக் கொடுத்தது யார் என்று தெரியவில்லை. அமைச்சர்களுக்குத் தவறான தகவல்கள், கொடுக்கப்பட்டு அந்தத் தகவலை நம்பி அவையில் அறிவிப்பது என்ற நிலை வருமானால் அது எந்த நிலையை நாட்டிலே உருவாக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சித்தமல்லிப் பகுதியில் நடந்த சம்பவத்தில் உண்மைக்கு மாறான தகவலை தந்திருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் நாளில் ஐ.பி.சி. 111, 107 செக்ஷன்கள்படி எஸ். ஜி. ராதா கிருஷ்ணன் தலைமையில் 23 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். செக்ஷன் 147, 148, 379, 447, 427 ஆகிய ஐந்து செக்ஷன்களின் கீழ் ஏ. கே. சுப்பையா மற்றும் 19 பேரை திராவிட முன்னைற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களையும், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களையும் கைது செய்திருக்கிறார்கள். ஒரு நிலத்திலே என்னமோ நெல் உதிர்ந்துபோய் விட்டதாகவும், வாழை இலை கிழிந்துவிட்டதாகவும், தேங்காய் கீழே விழுந்து விட்டதாகவும் சொல்லி இன்றைக்கு 25 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், ஆனால் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டபோது அது சம்பந்தமாக ஒரே ஒரு கைதுதான். ஒருவர் மீது தான்

1979 மார்ச் 31] [திரு. மு. அம்பிகாவதி]

வழக்குப்போடப் பட்டிருக்கிறது. அவர்கள் கூட இல்லை என்று செசன்ஸ் கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். தழை உதிர்ந்த வழக்கிற்கும் தலை உதிர்ந்த வழக்கிற்கும் இருக்கக்கூடிய விவரங் களைச் சரியான தகவல்களை தெரிவிக்காமல், பொய்யான வழக்குகளைப் போட்டு உண்மைக்குப் புறம்பான முறையிலே அவர்கள் மீது குற்றஞ்சாட்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த வர்களை 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் நாள் அன்று கைது செய்திருக்கிறார்கள். 17 ஆம் தேதி அமைச்சர் அறிவிக் கும்போது யாரும் கைது செய்யப்படவில்லை. குற்றம் ருசுவாக வில்லை. இரவிலே, நடந்ததாகச் சொல்லப்படுகிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த வழக்குப் போட்டது தவறு என்பதை அரசு ஒத்துக்கொண்டு, அப்படி உண்மைக்கு புறம் பான தகவல் கொடுத்ததற்காக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்சினையை நான் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் கொடுத்தது கவன ஈர்ப்புத் தீர்மானம், அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் கிடைக்கப்பெற்றது 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் அன்று. அந்தப் பதிலை 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் அன்று இந்த மன்றத்திலே படித்தேன். அப்படிப் படிக்கிறபோது இந்நிகழ்ச்சிகள் இரவில் நடைபெற்றமையாலும், நேரடி சாட்சிகள் இல்லாமையாலும் இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை. இவ்வழக்குகள் புலன் விசாரணையில் இருக்கின்றது என்பதை இந்த மன்றத்திலே நான் ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். 15 ஆம் தேதி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் 17 ஆம் தேதி தெரிவிக்கப்பட வில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அதை உரிமைப் பிரச்சினை யாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் தெரிவிக்க விரும்பு கிறேன், சாதாரணமாக ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு தகவல்களை நேரிலேயே அறிந்து சொல்வதற்கு வாய்ப்பு இருக் கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு முன்னாலேயே அறிவிக்கப்பட்டு தகவல்கள் தயாரிக்கப்படுகின்றன. கைது செய்யப்பட்டது என்பது அடுத்த கட்டம், சப்சிகுவன்ட் இன்சி டன்ட். எனவே தவறான தகவல் இந்த அவையில் தர வேண்டு மென்றோ அல்லது இந்த அவையின் உரிமைக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டுமென்றோ நிச்சயமாகக் கருதத் தேவை யில்லை. தயாரிக்கப்பட்ட விவரங்கள் 10 தேதியே அனுப்பப் பட்டுவிட்ட காரணத்தாலே தான் அவ்வாறு இங்கே தெரி விக்கப்பட்டது. ஆகவே வேண்டுமென்றே தவறான தகவலைத் தரவில்லை. இதிலே உரிமைப் பிரச்னை எதுவும் எழ வில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினைமீது எனது தீர்ப்பை பின்னர் அறிவிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே........

திரு. பொ. உத்திராபதி: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன இது, எழுந்து பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்?

திரு பொ. உத்திராபதி: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லாமல் பேசிக்கொண்டே இருக்கலாமா?

திரு. பொ. உத்திராபதி: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிப் பேசுவது முறையல்ல. அவர் பேசியது ஏதாவது காதிலே விழுந்திருந்தால்கூட நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: ஒரு விஷயத்தை நான் வேதனையோடு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசி, அமைச்சர் விளக்கம் அளித்த பிறகு தீர்ப்பைப் பின்னர் அறிவிப்பதாகச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு பேசக் கூடாது அமருங்கள்.

5. கவன ஈர்ப்பு

சென்னை, தேனாம்பேட்டையில் அமைக்கப் பெற்றுள்ள மருத்துவப் பரிசோதனை ஆய்வுக்கூடம் இயங்காமல் இருப்பது குறித்து.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, சென்னை தேனாம்பேட்டையில் 1973-ல் அமைக்கப்பட்ட மருத்துவ பரிசோதனை ஆய்வுக்கூடம் இதுவரை இயங்காததால் ஏற்பட்டுள்ள நட்டம் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.